ඔබේ අංකය
உமது இல
Your No.

මගේ අංකය
எனது இல
My No. SSD/SSS & WS

දිනය
திகதி
Date

දුරකථන අංක
தொலைபேசி இல
Telephone Nos.

ෆැක්ස්
தொலைநகல்
Fax

විද්‍යුත් තැපැල
ஈ மெயில்
E mail drsspdn@gmail.com

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF PERADENIYA, SRI LANKA

STUDENT SERVICES DIVISION

12/12/2022

அன்புள்ள மாணவரே,

நீங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தங்கியிருக்கும் காலத்தில் உங்களுக்கான நலன்புரித் தேவைகளைக் கவனித்துக்கொள்ளும் நோக்கத்துடன் சமீபத்தில் நிறுவப்பட்ட மாணவர் ஆதரவு மற்றும் நலன்புரி சேவைப்பிரிவால் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகள் குறித்து உங்களுக்கு இவ்வாவணம் தெரிவிக்கின்றது.

1. தங்கும் வசதிகள்

- விஜேவர்தன மண்டபம்: மண்டபம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு மாணவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அருணாசலம் மண்டபம்: முதல் தளம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது, மேல் தளம் 2023 பெப்ரவரிக்குள் புதுப்பிக்கப்பட்டு மாணவர்களுக்குத் திருப்பித் தரப்படும்.
- விடுதிகளுக்கான தளபாடங்கள்: சரசவி மெதுராவுக்கு பங்க் படுக்கைகள் வாங்குவதற்கு கொள்முதற் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**2. சிற்றுண்டிச்சாலைகள்**

மாணவர்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துபவர்களின் ஆலோசனையின் பேரில், முக்கிய உணவுகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் சமீபத்தில் திருத்தப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட புதிய விலைகள் சிற்றுண்டிச்சாலைகளுக்கு தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகமானது, கட்டிட இடம், மின்சாரம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் உணவு விலையில் தொடர்ந்து மானியம் அளித்து வருகிறது. மேலும், தளபாடங்கள் மற்றும் அத்தியாவசிய பாத்திரங்களை பல்கலைக்கழகம் வழங்குகிறது. சமீபத்திய எரிவாயுத் தட்டுப்பாடு பிரச்சினையின் போது, கோரிக்கையின் பேரில் பல்கலைக்கழகம் சிற்றுண்டிச்சாலைகளுக்கு கரியால் இயக்கப்படும் அடுப்புகளையும் வழங்கியது. மேற்கூரை கசிவை சரி செய்தல், சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், சேதமடைந்த சுவர்கள் மற்றும் தளங்களை சரி செய்தல் போன்ற சிறு திருத்தவேலைகள் நிறைவடைந்தன. மகாகந்தா மண்டபத்தின் சிற்றுண்டிச்சாலையின் திருத்தப்பணிகள் இந்த வாரத்தில் நிறைவடையும்.

**3. சுகாதார வசதிகள்**

COVID-19: பெருந்தொற்று மிகவும் அதிகரித்த காலத்தில் பல்கலைக்கழகம் பின்வருவனவற்றை வழங்கியது.

- இடைநிலை சிகிச்சை மையத்தில் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. அத்துடன், கடுமையாக நோய்வாய்ப்பட்ட மாணவர்கள் பேராதனை போதனா வைத்தியசாலையில் கவனித்துக் கொள்ளப்பட்டனர்.
- பல்கலைக்கழகத்திற்குள் தனிமைப்படுத்தல் மையங்களை அமைத்தல்.
- RAT மற்றும் PCR போன்ற சோதனைகளுக்கான கட்டணமில்லாத வசதிகள்.

- தடுப்பூசி: மாணவர்களுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் பூஸ்டர் மருந்தளவு வழங்குவதற்காக பல தடுப்பூசி முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பிற மருத்துவ உதவிகள் –

- பல்கலைக்கழகமானது ஹெபடைடிஸ் பி, ரேபிஸ், டெட்டனஸ் டொக்சொய்ட் மற்றும் வெரிசெல்லா ஆகியவற்றுக்கான தடுப்பூசிகளை தேவைக்கேற்ப தொடர்ந்து வழங்கும்.
- நோய்வாய்ப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை வசதிகள்.

**4. மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் உளவியல் ஆதரவு**

பல்கலைக்கழகமானது கணிசமான எண்ணிக்கையிலான இளநிலைப் பட்டதாரிகள் சில வகையான மன அழுத்தத்தில் இருப்பதாக புரிந்துகொண்டுள்ளது. தற்கொலை அபாயத்தைக் குறைப்பதற்கும், மனச்சோர்வுக்கு ஆளாவதைத் தடுப்பதற்குமாக, பல்கலைக்கழகமானது, ஆலோசனை மற்றும் உளவியல் உதவிப் பிரிவை (CaPSU) தொடங்கியதன் மூலம் ஆலோசனை வசதியை வழங்கியுள்ளது. மருத்துவப் பீடத்தின் உளச்சிகிச்சைத் துறை மற்றும் கலைப் பீடத்தின் உளவியல் துறை ஆகியவை உளவியல் ஆதரவை நாடும் மாணவர்களுக்கு, COVID-19 தொற்றுநோய்களின் போது மகத்தான ஆதரவை வழங்கியுள்ளன.

**5. நிதி உதவி**

- அரசாங்கத்தால் வழங்கப்படும் 7000 மஹாபொல மற்றும் 1000 க்கும் மேற்பட்ட உதவித்தொகைகளுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழகம் பின்வருவனவற்றை வழங்குகிறது;

i. தனிப்பட்ட ரீதியில் பீட மட்டத்தில், 660 மாணவர்களுக்கான உதவித்தொகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ii. உதவி தேவைப்படும் ஏறக்குறைய 300 மாணவர்களுக்கு வேலை செய்யும் 'மாணவர் உதவியாளர் திட்டத்தை (WSAP) நிறுவுதல்.

iii. உதவி தேவைப்படும் ஒரு சில மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்.

- குறுகிய கால நிதி உதவி

பொதுமுடக்க காலத்தில் நிதி உதவி கோரிய ஏழை மாணவர்களுக்கு குறுகிய கால உதவித்தொகையை பெரும்பாலான பீடங்கள் ஏற்பாடு செய்துள்ளன. மேலும், மருத்துவ பீடம் மாணவர்களின் அத்தியாவசிய பயிற்சிக்காக, பொதுமுடக்க காலத்தில் அவர்களை அழைத்து வருவதற்காக போக்குவரத்து வசதியை ஏற்பாடு செய்துள்ளது.

**6. பேரிடர்களின் போது வழங்கப்பட்ட உதவி**

பேரிடர் காலங்களில் பல்கலைக்கழகம் அவசர உதவிகளை வழங்குகிறது. தனியார் குடியிருப்பு வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி மற்றும் தற்காலிக குடியிருப்பு வசதிகளை வழங்கியமை மிகச் சமீபத்திய உதாரணம் ஆகும்.

7. துணைவேந்தர், பிரதி துணைவேந்தர் மற்றும் பிற நிர்வாக அதிகாரிகளை, மாணவர்கள் சந்தித்து உரிய விஷயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

பேராசிரியர் டெரென்ஸ் மதுஜித்
பிரதி துணைவேந்தர்